முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.9.2024) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் புதியதாக அமையவுள்ள வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிடம் (Coworking Space) மற்றும் வணிக வளாகங்கள் என 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் 4 தளங்களுடன் கூடிய "மக்கள் சேவை மையம் (Citizen Service Centre) கட்டப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் துணை ஆணையர் கே.ஜே. பிரவீன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.9.2024) கொளத்தூர், ஜி.கே.எம். காலனி 12வது தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பை உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் துணை ஆணையர் கே.ஜே. பிரவீன் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வனத்துறை சார்பில் பசுமை இயக்கத்தின் ஆண்டு விழா!

திருப்பெரும்புதூர் - தண்டலத்தில் 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி!

அமைச்சர்கள் சிவ.வீ.மெய்யநாதன் - மா.மதிவேந்தன் துவக்கி வைத்தனர்!

காஞ்சிபுரம், செப். 26- காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் தனியார் பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு வனத்துறை சார்பில் நேற்று முன்தினம் (24.09.2024) நடைபெற்ற பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் குத்து விளக்கேற்றி, 1000 மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சி யினை துவக்கி வைத்தார்கள்.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் இரண்டாம் ஆண்டு விழாவில் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் தமிழகத்தின் பாரம்பரிய மரங்கள் குறித்த நூல் வெளியிட்டு, தெரிவித்ததாவது:

பசுமை தமிழ்நாடு இயக்கம் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ் நாட்டின் பசுமை பரப்பை தற்போதுள்ள 23.7 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டது. பசுமை தமிழ்நாடு இயக்கம் இரண்டாம் ஆண்டு விழா நாம் எல்லோரும் சேர்ந்து இக்கல்லூரியில் கொண்டாடுவது நமது தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பான பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மக்கள் இயக்கம் என்பதற்கான சான்று ஆகும். தற்போதுள்ள காலநிலை மாற்றம் திடீர் திடீர் மாற்றங்களுடன் அதிகப்படியான வெப்பம் அதிகப்படியான மழை, வெள்ளம், நிலச்சரிவு, புயல் போன்ற பேரழிவுடன் கூடிய இயற்கைச்சீற்றங்கள் ஏற்படக்கூடிய சூழல் உள்ளதால் மரம் நடும் பணி ஒரு அறப்பணி என்பதற்கேற்பவும் மேற்கண்ட காலநிலை மாற்றத்தினை மட்டுப்படுத்தும் மிகப்பெரும் உன்னதமான பணியை பசுமை தமிழ் நாடு இயக்கம் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியதாகும். நமது முதலமைச்சர் நமது மாநிலத்தின் மக்களையும் மண்ணையும் காக்கும் விதமாக பல்வேறு தொலை நோக்கு திட்டங்களில் பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டம் ஒரு மைல்கல் திட்டம் ஆகும். மரங்கள் வளர்ப்பது என்பது அதுவும் வேளாண்மை நிலங்களில் உழவு தொழிலுக்கு குந்தகம் இல்லாமல் உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் மரக்கன்றுகள் வளர்க்கப்படுவது போற்றத்தக்கது ஆகும். மரம் வளர்ப்பதால் பல்லுயிர்களும் பாதுகாக்கப்படுகிறது. எனவே, மரங்கள் பல்லுயிர்களின் பாதுகாவலன் என்றே கூறலாம். ஆகையால் தற்போது தொழிற்சாலைகளின் அபரிமிதமான வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றத்தினை ஈடுசெய்யும் விதமாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறையின் மூலம் பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்கு மரம் நடும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தேவையான நிதி ஆதாரம் 135.12 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, கடந்த இரு ஆண்டுகளில் சுமார் 7 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. மரம் நடும் பணிகளில்

அனைத்துத் துறைகளையும், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், பள்ளி கல்லூரி மாணவ / மாணவியரை பங்கேற்க செய்வது உள்ளபடியே ஒரு பாராட்டுக்குரியதாகும். எனவே பசுமை தமிழ்நாடு இயக்கம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வெற்றி நடைபோடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தற்போது பெருகி வரும் நகர்மயமாதல், வாகனப்பெருக்கம் ஆகியவற்றினால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. எனவே தான் மரம் வளர்ப்பதன் மூலம் பசுமையாக்கல் பணி இன்றியமையாததாக ஆக்கப்படுகிறது. மேலும் கார்பன் படிவு, தேக்கம், நேரடியாக உயிரினங்களையும், மக்களை பாதிப்படையச்செய்கிறது. இதற்காகத்தான் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

அவ்வாறாக கார்பன் வரவு திட்டம் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் மத்திய அரசு சுற்றுப்புறம் வனம் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் 100 பகுதிகளில் சுமார் 2000 Ha பரப்புக்கு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மரம் வளர்ப்பு மூலம் கார்பன் வரவு என்ற மறைமுக நிதி வரவு ஈட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் 2023-2024ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் வாழ்விட மேம்பாட்டுக்காக உயிர் அரண் அமைத்தல் திட்டத்தின் படி சதுப்பு நிலங்கள் தேர்வு செய்து சதுப்பு நிலதாவரங்களான அவிசீனியா, ரைசோபோரா போன்ற தாவரங்கள் நடவு செய்து சுமார் 360 Ha பரப்பில் புதிய இடங்களில் சதுப்பு நிலக் காடுகள் உருவாக்கப்பட்டும் மேலும் 700 Ha பரப்பில் ஏற்கனவே நலிவுற்ற நிலையில் இருந்ததை சதுப்புநில காடுகள் மீட்டு உருவாக்கம் செய்தும் இத்துடன் இல்லாமல் 160,000 எண்ணிக்கை நம் மாநிலத்தின் மரமான பனை மரங்கள் நடவு செய்தும் மேலும் 180 Ha பரப்பில் சவுக்கு மரத்தோட்டங்கள் கடலோர பகுதிகளில் உற்பத்தி செய்தும் புயல் பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாப்பு செய்யும் நடவடிக்கைகளும் சுற்றுப்புறம் மற்றும் காலநிலை மாற்றத் துறை நிதி உதவியுடன் பசுமை தமிழ்நாடு இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் உலக வங்கி உதவியுடன் நெய்தல் புரட்சி இயக்கம் (Tamil Nadu Coastal Mission) என்ற புதிய இயக்கம் தமிழ் நாட்டில் 10 மாவட்டங்களில் 1076 கி.மீ. நீளம் கொண்ட கடலோர பகுதிகளை மேம்படுத்தும் விதமாக உலக வங்கி நிதி உதவி கோரி பிரேரணை ரூ.38.36 கோடிக்கு நமது முதலமைச்சர் அவர்களால் அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகையால் தமிழ்நாடு வனத்துறையுடன் சுற்றுப்புறம், காலநிலை மாற்றம் துறையும் இணைந்து இப்புவிப் பரப்பினை பசுமையாக்கும் பணிகள் காலநிலை மட்டுப்படுத்தும் பணிகள் கார்பன் வரவு போன்ற திட்டங்களும் செவ்வனே செயல்படுத்தப்பட்டு நமது முதலமைச்சரின் இலக்கினை நோக்கி வெற்றி நடை போட்டு வருகிறது எனவும் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

விழாவில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் சிறப்பு அஞ்சல் வில்லை வெளியிட்டு, தமிழ்நாடு வனத்துறை e-நர்சரி இணையதளத்தை துவக்கி வைத்தும் வனத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

பசுமை தமிழ்நாடு இயக்கம் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாட்டின் பசுமை பரப்பை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள பசுமை பரப்பை தேசிய வனக் கொள்கையின் படி 33 சதவீதம் கொண்டு வர வேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் கடந்த செப்டம்பர் 24ம் நாள் 2022ம் ஆண்டு நமது முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும் பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுக்க வேண்டும் என்ற முதலமைச்சரின் வேண்டுகோள் படி இதுவரை பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் 7307 எண்ணிக்கை தன்னார்வலர்கள், 32514 எண்ணிக்கை பொதுமக்கள், 3023 எண்ணிக்கை அரசு துறை அலுவலர்கள், 208 எண்ணிக்கை அறக்கட்டளைகள், 200 எண்ணிக்கை அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் 433 இதரநிறுவனத்தினர் இணைய வழியாக இணைந்து பசுமை தமிழ்நாடு இயக்கம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் என்பதை நிரூபித்து வருகிறார்கள். இதற்கு சான்றாக இவ்விழாவினை முன்னெடுத்து யங் இந்தியா தன்னார்வல இளைஞர் இயக்கம் பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் கைகோர்த்து அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது எங்களுக்கு பெருமை பட வைத்தது.

இவ்வியக்கத்தின் வனத்துறை மட்டுமல்லாது இதர துறைகளையும் பங்கு பெற செய்தும், பொதுமக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், தொழிற்சாலைகள் என அனைவரையும் உள்ளடக்கி மரக்கன்றுகள் நடும் பணியை ஊக்குவித்து ஒருங்கிணைக்கும் பணியை பசுமை தமிழ்நாடு இயக்கம் மேற்கொண்டு வருகிறது. நமது மாநிலத்தில் மரக்கன்று நடும் பணியான பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் திட்டத்தை நமது தமிழ்நாடு முதலமைச்சரின் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக முன்னுரிமை வழங்கப்பட்டும் வருகிறது.

மரக்கன்றுகள் நடும் பணியானது காப்புக்காடுகள் மட்டுமல்லாது காப்புவனங்களுக்கு வெளியேயும் அதாவது விவசாய நிலங்கள், சமுதாய நிலங்கள், இதர துறை சார்ந்த இடங்கள், சாலையோரம், நீர்நிலைகரைகள், பள்ளி, கல்லூரி வளாகங்கள் மற்றும் தொழிற்சாலை இடங்கள் என அனைத்து இடங்களிலும் மரக்கன்று நடவு செய்யும் பணிகள் செவ்வனே இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பசுமை தமிழ்நாடு இயக்கத்தில் வேளாண் துறை உள்ளிட்ட அனைத்து துறைகள் மற்றும் பொதுமக்கள், தன்னார்வலர்கள், விவசாயிகள் என அனைவராலும் இதுவரை சுமார் 7 கோடி மரக்கன்றுகள் நடவு செய்து சுமார் 1,25,000 Ha நிலப் பரப்பு பசுமையாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடவு செய்யப்படும் மரக்கன்றுகள் இடம் குறித்து விபரம், எண்ணிக்கை, செடி இனம் ஆகியவை புவிக் குறியீடு (geo tagging) செய்யப்பட்டு பசுமை தமிழ்நாடு இயக்கம் (www.greentnmission.com) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பசுமை தமிழ்நாடு இயக்கம் பணிகளை கண்காணிப்பு செய்யும் வகையில் மாவட்டம்தோறும் மாவட்ட

ஆட்சித்தலைவர் தலைமையில் இதரத்துறை அலுவலர்களை உள்ளடக்கி மாவட்ட பசுமை குழுக்கள் அமைக்கப்பட்டு பெருமளவு மரக்கன்று நடும் பணிகள் ஊக்குவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் என மொத்தம் 2000 நர்சரிகளில் அனைத்து தரப்பினராலும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து பருவமழையை பயன்படுத்தி நடவு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி இதுவரை ஏழு கோடி மரக்கன்றுகள் அனைத்து இடங்களிலும் நடவு செய்யப்பட்டுள்ளது. பசுமை தமிழ்நாடு இயக்கம் இரண்டாம் ஆண்டு விழா கொண்டாடப்படும் இந்நாளில் அனைத்து மாவட்டங்களிலும் பசுமை தமிழ்நாடு நாள் இன்று பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் மாவட்டந்தோறும் 1000 மரக்கன்றுகள் நடவு செய்து விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. ஆகையால் இன்று மாநிலத்தின் தலைமையகமான சென்னையில் பசுமை நிறைந்த இந்த தனியார் பொறியியல் கல்லூரியில் கல்லூரி மாணவ / மாணவியர் மத்தியில் இவ்விழா கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

எனவே நமது தமிழ்நாடு முதலமைச்சரின் கனவினை நிறைவேற்றிடும் வகையில் நாம் அனைவரும் கரம் கோர்த்து பசுமை தமிழ்நாடு இயக்கத்தினை ஒரு மாபெரும் ஒரு மக்கள் இயக்கமாக கொண்டு சேர்ப்போம் என கேட்டுக் கொள்கிறேன் வனத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் முனைவர். சுதான்ஷ்/ குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ம) உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம் மற்றும் தலைமை இயக்குநர், பசுமை தமிழ்நாடு இயக்கம் (மு.கூ.பொ) தீபக் ஸ்ரீவஸ்தவா, இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, இணை இயக்குநர் திருமதி தமிழ்மொழி அமுது, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில்

ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்!

அரியலூர்,செப், 26 - அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சாலைகள் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதுல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

அதன்படி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்தில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டடம் கட்டும் பணியினையும், தொடர்ந்து, தளவாய் கூடலூர் கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.18.42 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும், பின்னர், அயன் தத்தனூர் ஊராட்சி முல்லையூர் கிராமத்தில் அயோத்திதாச பண்டிதர் திட்டத்தின்கீழ் ரூ.8.77 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, துளார் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையினை திறந்து வைத்து, விற்பனையினையும் துவக்கி வைத்தார். பின்னர், அசாவீரன் குடிகாடு ஊராட்சியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் உணவு தானிய சேமிப்பு கிடங்கு (பொது விநியோக கடை) அமைக்கும் பணியினையும், தொடர்ந்து கஞ்சமலைப்பட்டி ஊராட்சியில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், பின்னர், மணப்பத்தூர் ஊராட்சியில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், தொடர்ந்து, மணப்பத்தூர் ஊராட்சியில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டடம் கட்டும் பணியினையும், அதனைத் தொடர்ந்து, சித்துடையார் கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து, பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதன் பின்னர், படைவெட்டிக்குகாடு கிராமத்தில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டடத்தினை திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர், குழுமூர் ஊராட்சியில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், அதனைத்தொடர்ந்து வங்காரம் கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.18.42 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும், தொடர்ந்து சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், பின்னர், நல்லநாயகபுரம் கிராமத்தில், சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், தொடர்ந்து, வஞ்சினாபுரம் ஊராட்சியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் உணவு தானிய சேமிப்பு கிடங்கு (பொது விநியோக கடை) கட்டடம் கட்டும் பணியினையும், தொடர்ந்து சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, பெருமாண்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.32.05 இலட்சம் மதிப்பீட்டில் மயான சாலையில் சிறுபாலம் அமைக்கும் பணியினையும், நக்கம்பாடி ஊராட்சியில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், தொடர்ந்து சொக்கநாதபுரம் கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும் என மொத்தம் ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.கவிதா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர் உசைன், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆதி.இளங்கோவன், ஒன்றிய துணை செயலாளர் காளமேகம், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சர்புதீன், மாரிமுத்து, செல்வம்,கழக நிர்வாகிகள் சுந்தர், ஆனந்த், வெற்றி உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், இதர அரசு அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நாகை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களுக்கு

அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் அறிவிப்பு!

நாகை, செப்.26- தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க. நாகை மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர.பேரூர் பொறுப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர். ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப் புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5 . விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ஆகவே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற்கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளரும்,பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் கழக தலைவருமான பி.எஸ்.சரவணன் பையர்நத்தம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி தலைமையாசிரியர் கொ.பிரபாகர் தலைமையில் நடைபெற்ற விழாவில் சுமார் 50 மாணவ. மாணவியருக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் ஊராட்சிமன்ற தலைவர் சாந்தாகுப்புசாமி, ஒன்றியக் குழு உறுப்பினர் சி.கண்ணன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் திருமதி.தீபாமாதேஷ், மற்றும் பெற்றோர்கள் – ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.